1209

Reg. No. M. 1354

போதக விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலர்ப்.

27 FEB 1940
MADRAS

அறிவே ★ உழைப்பே
ஒழுக்கமே
திறன்
ரேச மாதா
மாதா
நேசை மாதா

கொத்து 30

மலர் 8

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 பெப்ருவரி 1940

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

தனிப்பிரதி அணு 1½.

JL
ZZ4,N11PP.
N40.30.8.
182452

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	169
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதி ...	172
3.	செயல்முறைக் கல்வி	173
4.	காவியத்தில் ஓவியம்	177
5.	பாடக் குறிப்பு	179
6.	நான் கொடுத்த "டோஸ்" (சிறு கதை) ...	184
7.	ரப்பர் (Rubber)	188
8.	விடுகதைகள்	191
9.	விடுகதை விடைகள்	191
10.	அபிநயப் பாட்டு	192

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனமுறைப் பாடசாலை, திருச்சி.

வேத தர்க்கம்

கத்தோலிக்கர் பதிதர்களோடு தர்க்கஞ்செய்ய ஓர் இலகுவான ஆயுதம்

பக்கம் 154. விலை அணு 7.

ஞானம் செறிந்த நூலாயினும், வாசிப்பதற்கு இனிமையானது. காலத்திற்கேற்ற புஸ்தகம். நமது வேதத்தையும் வேதக் கோட்பாடுகளையும் பழித்துப் பேசவும், எழுதவும் முன்வருபவர்களுக்கு உடனுக்குடன் ஆணித்தரமான பதிலளிப்பது கத்தோலிக்கன் ஒவ்வொருவனுடைய் கடமையும் பெருமையுமாயிருக்கவேண்டும். அவ்வித பதில்கள் அழகாக தொகுக்கப்பட்டு வேத தர்க்கம் என்னும் பெயருடன் வெளிவந்திருக்கின்றது. எளிய நடை. நாவலைப்போல் இன்பம்தரும் வாசகம். ஒழிந்த நேரங்களில் சிரமமின்றி வாசித்துப் பயனடையலாம். படித்த ஒவ்வொரு கிறீஸ்துவன் கையிலும் இருக்கவேண்டியது.

தபாற் செலவு அணு 2.

அறநெறி மார்க்கம்

சங். ஜே. ஜெகநாதசுவாமிகள் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதிய அருமையான புஸ்தகம்

அல்லது

மனிதனின் அதிமுக்கிய அலுவல்

கடவுள் ஒருவர் உண்டென்று அங்கீகரிக்கும் எம்மதத்தினருக்கும் பொதுவான நன்மார்க்க போதனைகளடங்கியது.

நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நடந்துகொள்ள வேண்டிய வழியைக் காட்டும் உத்தம நண்பன்.

பக்கம் 189. விலை 8 அணு.

தபாற் செலவு 2 அணு 6 பை.

முக்கிய கவனிப்பு.

ஆரம்ப பாடசாலைகளுக்கு

புதிய ரெஜிஸ்டர்கள்

அநுபந்தம் 34.

Record Sheet குறிப்பு ஏடு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் விலை அணா 10 மட்டும்.

அநுபந்தம் 33.

MONTHLY RETURN

மாதாந்தரக் கணக்கு

சைஸ் $8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$

100 ஷீட்டுகள் அணா 10.

12 ஒரிஜினல் 12 டியூபிலிகேட்

24 கடுதாசிகள் கொண்ட ஒரு புஸ்தகத்தின்

விலை அணா 2—6.

Stagnation Register Sheets

தேங்கல் ரெஜிஸ்டர்

12 ஷீட்டுகள் ரூ. 0—6—0.

600 பிள்ளைகள் வரைக்கும் எழுதக்கூடியது.

சைஸ் $20'' \times 15''$ பைண்டிங் சார்ஜ் பிரத்தியேகம்.

Apply to: St. Joseph's I. S. Press, Trichinopoly.

பைண்டிங் சார்ஜ் பிரத்தியேகம்.

விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 30] 15 பெப்ருவரி 1940 [மலர் 8

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை **1940**—வழக்கம்போல் இவ்வருஷம் நமது போதனாமுறைப் பாடசாலை, பரீட்சை ஸெண்டர் ஆகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இங்கு நமது மாணவர்களும் அரசாங்க போதனாமுறைப் பாடசாலை மாணவர்களும் ஷை பரீட்சை எழுதுவார்கள்.

முந்திய வருஷத்தைப்போல் பிஷப்ஹீபர் கலாசாலை ஸெண்டரில் ப்ரைவேட் (Private) மாணவர்கள் பரீட்சை எழுதுவார்கள்.

ஷை பரீட்சை கால அட்டவணையை மறுபக்கத்தில் பார்க்கவும்.

* * *

ஆறு மாத ரிப்போர்ட்:—வேலை பார்த்துவரும் நமது பழைய மாணவர்கள் தாங்கள் அனுப்பவேண்டிய ஆறு மாத ரிப்போர்ட்டை ஒழுங்காய் அனுப்பிவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சிலர் ஒழுங்கீனமாய் இருப்பதால் இதை நாம் நினைப்பூட்டவேண்டியதாய் இருக்கிறது. இது வரை வேலையில் அமராதவர்கள் அதைக் குறித்து உடனே

நமக்குத் தெரிவித்துக்கொள்ளக்கடவர். ஷை ரிப்போர்ட்டை கண்டிப்பாய் அனுப்பவேண்டியதை அனைவரும் நன்குணர்வார்களாக.

* * *

அடுத்த ஜூலை மாதம் நமது போதனாமுறைப் பாடசாலையில் சேகண்டரி கிரேடிலும் ஹையர் எலிமேண்டரி கிரேடிலும் சேர விரும்புகிறவர்கள், எமது விலாசத்திற்கு பாரம் ஒன்றுக்கு 2 அணா வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி தேவையான அப்ளிகேஷன் பாரங்களை (Application Forms) பெற்றுக்கொள்ளக்கடவர்.

மனுக்கள் (Application) வருகிற மே மாதம் 31-ம் தேதிக்குள் நமக்கு வந்துசேரவேண்டியது. மற்றும் விபரங்கட்கு, போதிய ஸ்டாம்புகள் வைத்து எழுதிக் கேட்டால் பதில் அளிக்கப்படும்.

* * *

"பூங்கொத்துக்கு" **விஷயதானம்** புரிவோர், தாம் எழுதுவதைத் தெளிவாயும், கூடியமட்டும் சுருக்கமாயும் அரைத்தாளில் (Fools' cap paper) எழுதி அதைப் 'பூங்கொத்தின்' பத்திராதிபருக்கு* அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* * *

* முன்மாதம் இருபத்தைந்து தேதிக்குள்.

ஆசி. மாணவன் :—தம்பி! வகுப்பில் எப்படி இருக்கிறாய்?

மாதிரிபாட மாணவர் :—எப்பொழுதும்போல இருக்கிறேன்.

வகுப்பில் கெட்டிக்காரத்தனம் எப்படி?

கால் உதை பந்தில் எல்லோரும் என்னைத் தூரத்தவும், பாடங்களில் நான் மற்றவர்களை யெல்லோரையும் தூரத்துகிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182452

Training-School Leaving Certificate Examination, MARCH 1940.

Time-Table

The Examination will be conducted in the order of time and subject shown in the subjoined table :—

Secondary Grade

Days and hours. 1940.	Subjects
Monday, 18th March-	
10 a.m. to 1 p. m. ...	Organisation and Discipline.
Tuesday, 19th March-	
10 a.m. to. 1 p.m. ...	General Principles of Education.
Wednesday, 20th March-	
10 a.m. to 1. p.m. ...	Methods of Teaching Subjects.
2 p.m. to 5 p.m. ...	Drawing and Blackboard Work.

Elementary Grade (Higher)

Monday, 18th March-	
10 a.m. to 1 p.m. ...	First Language.
2 p.m. to 4 p.m. ...	Geography.
Tuesday, 19th March-	
10 a.m. to 1 p.m. ...	Elementary Mathematics.
2 p.m. to 4 p.m. ...	Nature Study.
Wednesday 20th March-	
10. a.m. to. 12 noon...	Elementary Sociology.
2 p.m. to 4 p.m. ...	History of India ; English.
2 p.m. to 3-30 p.m....	Indian music.

Elementary Grade (Lower)

Monday, 18th March-	
10 a.m. to 12 noon ...	Nature Study.
2 p.m. to 4 p.m. ...	Elementary Sociology.
Tuesday, 19th March-	
10 a.m. to 1 p.m. ...	First Language.
2 p.m. to 4 p.m. ...	Geography.
Wednesday 20th March-	
10 a.m. to 1 p.m. ...	Elementary Mathematics.

சென்னை கல்வி இலாகா-திருத்த விதி

Amendment to the Madras Educational Rules

விதி **142.** (Rule 142) தற்பொழுதுள்ள விதிக்குப் பதிலாக இதனடியில் வரும் திருத்துவிதியை அமைத்துக் கொள்ளவும் :—(Page 812 of Fort St. George Gazette, Part I. B. dated 12-12-39. G. O. No. Ms. 2710 Education dated 4-th Dec. 1939).

அரசாங்கப் பரீட்சைகளை நடத்தும் கமிஷனர் (Commissioner for Government Examinations) பரீட்சையில் தேறியுள்ளவர்கள் இன்னன்னவர் எனத் தீர்மானித்து அவர்களுடைய பெயரை கெஜட்டில் (Fort St. George Gazette) பிரசுரமாகும்படி செய்வர். அவ்வாறு தேறினவர்களுக்கு "பயின்ற ப்ரோபேஷனரி ஆசிரியர்கள்" (Probationary Trained Teachers) என்று பெயர்.

ஆனால் அவர்கள் பரீட்சை எழுதிமுடித்த கடைசி தினத்திற்கு மறுநாள்முதல் 3 வருஷங்களுக்கு அவரவர் கிரேடுக்குத் தக்கபடி "பயிற்சிபெற்ற ஆசிரியராக" (Trained Teacher) பாவிக்கப்பட்டு கல்வி விதிகள், திரவிய சகாய விதிகளின்படி (Madras Educational Rules and Grants-in-aid Code) கிராண்டு வழங்கப்படும்.

குறிப்பு :—"அவரவர் பரீட்சைக்கு ஆஜராகித்தேறின அந்த வருஷத்தின் ஏப்பிரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து......" என்பதற்குப் பதிலாக, மேலே கூறியுள்ளது திருத்தம்.

உபாத்தியாயர் :—ஜலம் ஐஸாக மாறினால் என்ன வித்தியாசம் உண்டாகும்?

மாணக்கன் :—விலையில்லாத ஜலத்திற்கு விலையுண்டாகும்.

செயல்முறைக் கல்வி

(Project Method)

A. R. Joseph, B.A., L.T.

மானிட வாழ்க்கை காலத்துக்கேற்றபடியும், உலக நாகரீகத்தின் போக்குக்கேற்ப மாறிக்கொண்டுவருவதுபோல், கல்வியும் உலக வாழ்க்கைக்கேற்றவாறும், நாகரீக பெருக்கத்தின் பொருட்டும் மாறிவருவது அவசியம். ஆதலின் கல்வித் துறையில் காலத்திற்கேற்றபடி புதிய போதனு முறைகளும், பாடத் திட்டங்களும் அப்போதைக்கப்போது மாறுபாடு அடைந்து வருகின்றன. கிண்டர்கார்ட்டன் முறை, மாண்டாசாரி முறை, டால்ட்டன் பிளான், ஹவர்ட் பிளான் (Howard Plan) ப்ரோஜக்ட் முறை என பல நவீன கல்வி முறைகள் வெளிவந்திருக்கின்றன. இதில் ப்ரோஜக்ட் முறையைப்பற்றி நாம் இங்கு ஆராய்ச்சிசெய்வோம்.

ப்ரோஜக்ட் முறை என்பது என்ன? ஒரு பொருளை அல்லது காரியத்தை அதன் இயற்கை அமைப்பில் பரிசீலனை செய்யும் ஒரு பிரச்னை. "A problematic Act carried to completion in its natural setting" (Dewey). இம்முறையில் மூன்று முக்கிய அம்சங்கள் உண்டு. அதாவது ஒரு பிரச்னை—பொருளை அதன் இயற்கை அமைப்பில் பார்ப்பது—அப்பொருளைப் பரிசீலனை, ஆராய்ச்சி செய்வது என்பதாகும்.

இம்முறையைப் பிள்ளைகள் கையாடிவரும்போது இன்னும் இது சம்பந்தமான புது அறிவுகளையும் விஷயங்களையும் கண்டு கொள்ள ஏதுவாகும். இம்முறையினுல் பிள்ளைகளுக்குப் படிப்பதிலும், விஷயங்களை அறிவதிலும் அதிக உற்சாகம், ஊக்கம் ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில் பிள்ளைகளுக்கு விஷயங்களை அறிய ஒரு ஆவல் ஏற்படுகிறது. இம்முறையினுல் தாங்கள் கற்றுக்கொண்ட விஷயங்கள் அவர்கள் மனதில் பதியும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் அவர்களுக்கு ஆசை ஆவல் ஏற்பட்டு தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ளுகின்றனர். ஆனதுபற்றியே Dr. Kilpatrick, Dr. Collings முதலிய மேனுட்டு சாஸ்திரிகள் தற்காலத்திய பாடத் திட்டத்தை அறவே ஒழித்து, பிள்ளைகளின் அறிவிற்கும், சாமார்த்தியத்திற்கும், பழக்க வழக்கங்களுக்கும், ஆவலுக்கும் தக்கவாறு பாடத் திட்டங்களை

ஏற்படுத்தியுள்ளார்கள். அதில் கைவேலைகள், கதைகள், விளையாட்டுகள், உல்லாச பிரயாணங்கள், தேகப் பயிற்சி இவ்வித பிரிவுகள் அடங்கியுள்ளன.

எல்லாப் பாடங்களையும் இந்த ப்ரோஜக்ட் முறையின்படி போதிக்க இடமுண்டு. 1. ஆங்கில பாஷையை Direct Method (நேர் முறை) வழியாய் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம். அதாவது எவ்வாறு ஆங்கிலக் குழந்தைகள் தங்கள் தாய் பாஷையைப் பேசிக் கற்றுக்கொள்ளுகின்றனவோ அவ்வாறே நாம் அப்பாஷையைப் படிப்பிப்பது. 2. பூகோள பாடத்தில் சமாதான நாளை (Armistice Day) (நவம்பர் மாதத்தில் 11-ம் தேதியன்று 11 மணி) கொண்டு உலக மணி நேரங்களையும், அவைகளின் தீர்க்க ரேகைகளையும் ஆராய்ச்சி செய்யலாம். சிறுவர்கள் காலத்திற்கு ஏற்றபடி சிறு விளையாட்டுகள் விளையாடுவது வழக்கம். அதாவது கோலி விளையாட்டு, காற்றாடி விடுவது, பம்பரம் விளையாடுவது. அக்காலங்களில் அவ்விளையாட்டுகளில் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு அதிலிருந்து சகல பாடங்களையும் போதித்தல் நலம். உ-ம். கோலி விளையாட்டில் வட்டம், அரை வட்டம், விட்டம், தூரம், திசைகள், வடிவம், போட்டிப்பந்தயம், இன்னும் அநேக விஷயங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம். இவ்விளையாட்டு பந்தயங்களைப்பற்றி தர்க்கம் செய்யவும் வியாசம் எழுதவும் கூடும்.

பூந்தோட்ட வேலையை ப்ரோஜக்ட் முறையில் போதிக்க இடமுண்டு.

சந்தர்ப்பம் :—மாகாண கவர்னர் திருச்சியிலுள்ள ஒரு பூந்தோட்டத்தைத் திறந்துவைக்கப்போவதாகத் தெரிதல். இவ் விஷயமாய் மாகாண கவர்னர், மாகாண அரசியல், அவர் இருப்பிடம், அவர் வேலைகள், இன்னும் திருச்சி நகர பரிபாலன சபை, அதன் வேலைகள், நகர பரிபாலன சபையின் அக்கிராசனாதிபதி, இதர மெம்பர்கள், வரிவசூல், செலவு இவைகளைப்பற்றி சிவிக்ஸ் பாடத்தில் ஆராயலாம். பூகோள பாடத்தில் சென்னை ராஜதானி, திருச்சியின் இருப்பிடம், பட்டணத்திற்கும் திருச்சிணப்பள்ளிக்கும் எவ்வளவு தூரம், எவ்வாறு போகலாம் இவைகளைக் கற்பிக்கலாம். அந்தப் பூந்தோட்ட திறப்பு விழாவை பார்க்கப்போக தலைமை ஆசிரியரிடம் உத்தரவு பெறல், அதற்கு அவர் சமுகத்திற்கு கடிதம் எழுதுதல், பிறகு அத்தோட்டத்திலுள்ள அநேகவிதமான செடி கொடிகளைப்பற்றியும் பூக்களைப்

பற்றியும் அவைகள் பயிராவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை, பூசாரம் அவைகளின் முக்கிய பிரயோஜனங்களைப்பற்றியும் தெரிதல். பிறகு பிள்ளைகளே தங்களது பள்ளிக்கூடத்தில் ஒரு பூந்தோட்டத்தை அமைத்தல், எந்த இடத்தில், எப்படி தோட்டத்தை அமைத்தல் என்று தர்க்கித்தல், இது சம்பந்தமாய் திருச்சினுப் பள்ளியிலுள்ள அநேக பூந்தோட்டங்களைத் தரிசித்தல், அவைகளின் சுற்று அளவையும் அமைப்பின் மாதிரியையும் கற்றுக் கொள்ளுதல், இது சார்பாக "நரியும் திராக்ஷைக் கொடியும்" என்ற கதையும், தோட்ட சம்பந்தமாய் அநேக சிறு சிறு கதைகள் சொல்லி அப்பிள்ளைகளுக்குத் தோட்டத்தின்மேல் ஓர் ஆவல் ஏற்படுத்துவது. பள்ளிக்கூட தோட்டத்தின் அமைப்பு, விஸ்தீரணம், சுற்று அளவு எடுத்தல், படம் வரைதல். எவ்விதமான பூச்செடி கொடிகள் வைத்தல், பாதை போடுவது— கணித பாடத்தில் இது சம்பந்தமான விஷயங்களைப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளுதல். பூச்செடிகளின் விதைகளையும், பதியம் செடிகளையும் சர்க்கார் விவசாய லாக்காவிலிருந்து கடிதம் எழுதி தருவித்தல்—முளை போடுதல், தண்ணீர் ஊற்றல், வளர்த்தல், அழகான பூக்களைப்பற்றி வியாசம் எழுதுதல், பூக்களைச் சேகரித்தல், அவைகளை வரைதல், பாடம் பண்ணுதல், கடைசியாய் தோட்டங்களினுல் மானிடர்களுக்கு வரும் பிரயோஜனம், சுத்த வாயு, காலப்போக்கு, அழகிய பொருளைப் பார்த்து பூரித்தல், தேக ஆரோக்கியமடைதல், இன்னும் இது சம்பந்தமாய் அநேக விஷயங்களை அறிதல், மாணவர்களே முயற்சியெடுத்து ஆராய்ச்சி செய்தல் முதலியனவாம்.

இம்முறையை அனுசரிப்பதனுல் அநேக நன்மைகள் உண்டு. முதலில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பாடங்கள், கற்கும் விஷயங்கள் உலக வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. விஷயங்களையும் அவைகளின் இயற்கை அமைப்பில் சிறுவர்கள் கற்க ஏதுவாயிருக்கின்றது. பிள்ளைகள் அநேக விஷயங்களைக் கற்று அறிய ஒரு பெரிய ஆவலை இம்முறை தூண்டி எழுப்புகிறது. அதனுல் அவர்கள் சந்தோஷகரமாயும், வெகு உற்சாகத்துடனும், தாங்களே ஆராய்ச்சிசெய்து விஷயங்களைக் கற்றுக்கொள்ளுகின்றனர். சிறுவர்களின் புத்தி அறிவிற்கேற்றபடி விஷயங்களைக் கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. இம்முறையால் பிள்ளைகளின் ஞாபகசக்திமட்டும் தேர்ச்சியடைவதுமல்லாமல் அவர்கள் எல்லாவிதங்களிலும் தங்களது பிற்கால ஜீவியத்தில் ஈடுபட்டு உழைக்கும் திறமையும் அதிகரிக்கின்றது.

ஆனால் பள்ளிக்கூட பாடத் திட்ட வேலைகள் இம் முறையை அனுசரிப்பதினால் தாறுமாறுகின்றன என்பது சிலரது அபிப்பிராயம். இம்முறையில் கற்றுக்கொண்ட புத்தி அறிவு சரியானபடி சீர்திருத்தப்படாமல் அரைகுறையாயும், அநேக விஷயங்களை ஒரே சமயத்தில் பார்ப்பதினால், ஒரு விஷயமும் ஸ்திரமாய்ப் பதியாமல் போகிறது என்பதும் அவர்களது தாற்பரியம். எவ்வாறிருந்தபோதிலும் நாம் பிள்ளைகளைப் பிற்கால ஜீவியத்திற்கும், அவர்கள் தேசாபிமானிகளாயும் பரோபகார சிந்தையுள்ளவர்களாயு மிருக்கும்படியும், தங்களது அலுவல்களைச் சரிவரச் செய்து தேச முன்னேற்றத்துக்கு உழைக்கத் திறமையையும் சக்தியும் ஊட்டுவது அவசியம். இக்கருத்துக்களை எவ்வழிகளின் மூலம் சீக்கிரத்தில் அடையமுடியுமோ அவ்வழிகளையும், முறைகளையும் கையாடுவது உசிதம்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானுவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	ரூ. 1—0—0
வெளி நாடு	ரூ. 1—6—0

விலாசம்:—

சூப்பரின்டேண்டு,

சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினுப்பள்ளி.

காவியத்தில் ஓவியம்

(125-ம் பக்கத் தொடர்ச்சி.)

M. A. S. Udayar, Tamil Pandit.

சென்ற இதழில் நம் மகா கவியாகிய வீரமாமுனிவரின் ஓரோவியத்தைச் சிறிது ஆராய்ந்தோம். இவ்விதழிலும் அவரது சித்திரச்சாலையாம் தேம்பாவணியுட் சென்று வேறு சில சித்திரங்களைக் காண்பாம்.

பருவ காலத்து மேகம் களிப்பொடு பொழிந்த மழையைத் தன்பாலேற்று அம் மாரியா னுண்டாம் செயற்கையருவியும், தன்னியல்பா லுண்டாம் இயற்கையருவியும் ஒருங்குசேர மலைகள் பெருக விட்டன. அவ்வருவிகள் பல கால்களாய்ப் பிரிந்தோடிப் பலவகையான பைங்கூழ்களைச் செழிக்கச்செய்தன. ஆண்டுறையும் மாந்தரை உண்பித்தன; மிகுந்த நீர் கால்வழிச் சென்று கடலடைந்து ஒன்றாயின. இந்நிகழ்ச்சியை நன்னெறியிற் சித்திரிக்க வெண்ணிய சித்திரக்கலைஞர் அதற்கு எடுத்துக் காட்டாக மற்றோர் ஓவியத்தையும் வரைந்து நம்மை மகிழ்வித்துத் தாமும் மகிழ்கின்றார்.

எவ்வனப் பருவமும் எழில்மிகும் உருவமும் ஈன்றணிவுடைமையும் பெற்ற நற்றாயொருத்தி கண்கவர் வனப்பினாற் காண்பவர் மனத்தைப் பண்புறச் செய்யும் பச்சிளங் குழவியைப் பொங்கிய சிறப்பாற் பொற்புறுந்தனது செங்கரத்தேந்திச் செறிதருவிழைவாற் கொங்கைபின்னமுதைக் குழைவுடனூட்ட, உண்டு தேக்கிட்டு எஞ்சிய தீம்பால் தடைப்படாதொழுகி உடைப்புறஞ்சார்ந்தது; என்று வரையுமுகத்தான் அவ்வோவியம் நிறைந்து நிலவுகின்றது.

ஓவியம் வருமாறு :—

“ மலையினேரறல் மலியநாற் றிணை யருந்திய பின்
னலையினேருறல் வனிதன் மகர்க் கெலா மூட்டி
முலையினேருறீஇ விஞ்சுபான் முடுகலினுடுத்த
கலையினேருறீஇக் களிப்போடு சிந்துவபோன்றே ”

இதன் பொழிப்பு :—மலையினின் றொழுகும் இயற்கைத் தன்மையும் செயற்கைத்தன்மையுங் கொண்ட தெண்ணீரருவி குறிஞ்சி,

பாலை, முல்லை, மருதம் என்று கூறப்படும் நால்வகை நிலங்களி லும் புக்கு ஆண்டுறையும் உயர்திணைப்பொருள்களும் அஃறி ணைப் பொருள்களுமாகிய இயங்கியற்பொருள், நிலையியற் பொருள்கள் என்று சொல்லப்படும் அசையும் பொருள் அசை யாப்பொருள்களை உண்பிக்க அப்பொருள்கள் உண்டு மிகுந்த நீர் கடலிற் போய்விழும் தோற்றமானது ஓர் பெண் தனது கொங்கைகள் நிரம்பிய தீம்பாலைத் தன் இள மகவுக்கு ஊட்ட அக்குழவியுண்டும் குறைவுறாது பெருகிவடியும் சுவை மிகும் பால் அவள் உடுத்திருந்த நீலச்சிற்றுடையை நனைப்பது போன் றிருந்தது என்பது.

இதில் ஓவியர் பூமியை ஓர் பெண்ணாகவும் மலைகளை அவ ளது தனங்களாகவும், மலையினின் றொழுகும் அருவியை, அம் மாதின் கொங்கையினின்றொழுகும் தீம்பாலாகவும், நாற்றிணைப் பொருள்களை அம்மாதின் மக்களாகவும், அப்பொருள்கள் நீருண் டலை அம்மக்கள் பாலுண்டலாகவும் சமுத்திரத்தை அம்மாதின் ஆடையாகவும் எஞ்சிய நீர் கடலிற் கலத்தலை ஒழுகிய பால் ஆடையைச் சார்தலாகவும் உவமித்துத் தனிப்பெருஞ் சிறப்புற வனைந்த சித்திரம். இத்துணைச் சிறப்பினையுடையதென்று எடுத்தியம்புந்தரத்தன்று.

(தொடரும்)

அலெக்ஸிஸ் :—சலேஸ், உனக்கு கொய்யாக்கனி வேண் டுமா?

சலேஸ் :—எங்கே கொடு.

அ.: (மரத்தில் ஒரு பழத்தைச் சுட்டிக்காட்டி) அதோ பார்.

ச.: ஆகா, அத்தான் கொய்யாக்கனியோ?

அ.: பல்லைக்காட்டாதே. மரத்தினின்றும் கொய்யாத கனி கொய்யாக் கனிதானே.

பாடக் குறிப்பு

R. Pitchai Pillai

பாடம்: இந்து தேச சரித்திரம்.

வகுப்பு: V.

நேரம்: 45 நிமிஷம்.

நோக்கம்:—விக்கிரமாதித்தரின் ஆட்சியைப்பற்றிப் போதித்தல்.

உபகரணம்:—விக்கிரமாதித்தரின் இராஜ்ஜியத்தைக் குறித்த இந்தியாவின் படம். (கரும்பலகையில் வரைதல்.) அவருடைய நாணயங்களின் சித்திரப் படங்கள். ஆசியாக் கண்டத்தின் படம்.

விஷயம்	முறை
பீடிகை:—அசோகர் ஒரு பெரிய சக்கிரவர்த்தி. இந்தியாவின் பெரும் பாகத்தை வெகு அன்போடு ஒரு குடையின்கீழ் ஆட்சிபுரிந்தார்.	இந்தியாவின் பெரும் பாகத்தை ஆண்டு வந்த புகழ் பெற்ற அரசன் யார்?
புத்த மதத்தை விருத்தி செய்ய பல தூண்களை நாட்டி அவைகளில் புத்த மதக்கொள்கைகளைச் செதுக்கி வைத்தார். மலைக்குகைகளிலும், பாறைகளிலும் புத்த மத நீதிகளை பல பாஷைகளில் வரைந்து வைத்தார். பல குருக்களை அனுப்பினார். பல புத்த மதக் கோவில்களைக் கட்டினார்.	புத்த மதம் பரவுவதற்காக அசோகர் செய்த காரியங்கள் யாவை? என வினவி முன்னறிவைச் சோதிக்கவும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182452

குறிப்பு :—சுமார் 500 வருஷங்களுக்குப்பிறகு இந்தியாவில் ஆட்சிபுரிந்த மற்றொரு சிறந்த அரசனைப்பற்றிப் படிப்போம் என்று நோக்கத்தை வெளியிடவும்.

விஷயம்	முறை
பாடம் :	
1. விக்கிரமாதித்தர் :—	
பாடலி புத்திரத்திற்கருகே (Patna) ஒரு இராஜ்ஜியம் இருந்தது. அதன் பெயர் “மகத இராஜ்ஜியம்” மகத இராஜ்ஜியத்தின் மன்னர்கள் குப்த குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் சமுத்திரகுப்தர் ஒரு சிறந்த அரசர். அவருடைய மகனுக்கு இரண்டாவது சந்திர குப்தர் எனப் பெயர். இவரை விக்கிரமாதித்தர் என்றும் அழைப்பார்கள்.	பாடலி புத்திரம், மகத இராஜ்ஜியம் இவைகளைப் படத்தில் குறிப்பிடும்படிப் பிள்ளைகளைத் தூண்டுதல். குப்தகுலம், சமுத்திர குப்தர், விக்கிரமாதித்தர் இவர்களைப்பற்றிக் கூறுதல்.
2. விக்கிரமாதித்தருடைய குணங்கள் :—	
பெரிய போர்வீரர். தேசத்தைப் பரப்ப ஆவலுள்ளவர். தைரியசாலி. நீதிநியாயத்தோடு ஆள்பவர். ஜனங்களுக்கு நன்மைசெய்யும் பரோபகாரி. சிறக்கக் கற்றவர். கல்விமட்டில் அதிக அபிமானமுள்ளவர். சங்கீத வித்வான்களையும், சிற்பிகளையும், சித்திரிப்போரையும் ஆதரிப்பவர். இந்துவாயினும் ஏனைய மதங்களின்மேல் துவேஷமில்லாதவர்.	ஒரு சிறந்த அரசனிடம் தன்நாட்டின் மட்டிலும், நாட்டார் மட்டிலும், நாட்டின் மதங்கள் மட்டிலும், இருக்கவேண்டிய நற்குணங்களைச் சம்பந்தப்படுத்திக் கூறுதல். இவ்வாறு நற்குணங்களையுடைய சில தெரிந்த அரசர்களைப்பற்றிக்கூறும்படி மாணவர்களைத் தூண்டலாம்.

விஷயம்	முறை
3. விக்கிரமாதித்தர் செய்த காரியங்கள் :—	
வடநாடுகளையெல்லாம் பிடித்துக்கொண்டார். தெற்கே தக்ஷணம் வரையில் பரவியிருந்தது. "உஜ்ஜயினி" என்ற பட்டணம் தலைநகரமாயிருந்தது.	இராஜ்ஜியத்தின் விஸ்தீரணத்தையும், தலைநகரத்தையும் இந்தியாப் படத்தில் குறித்துக் காட்டி விளக்கவும்.
நியாயமான வரிகளைமட்டும் வசூலித்தார். பல கோவில்களையும், தருமசாலைகளையும், சத்திரஞ்சாவடிகளையும், வைத்தியசாலைகளையும் அமைத்தார். குற்றவாளிகளை இலகுவாய்த் தண்டித்தார். கசையடித் தண்டனை கிடையாது. நீதியோடு ஆண்டார். கல்வியை வெகுவாய் விருத்திசெய்தார்.	வரி வசூலித்தல், மதம், ஏழைகள், பிரயாணிகள், நோயாளிகள், குற்றவாளிகள், கல்வி முதலியவைமட்டில் அரசர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் எனக் கேட்டுச் சம்பந்தப்படுத்தவும். அசோகர் செய்த காரியங்களையும் ஞாபகப்படுத்தலாம்.
4. நவரத்தினங்கள்—காளிதாசர் :—	
விக்கிரமாதித்தருடைய சமஸ்தானத்தில் ஒன்பது சிறந்த வித்வான்கள் இருந்தனர். அவர்களுக்கு நவ ரத்தினங்கள் என்று பெயர்.	நவரத்தினங்களைப்பற்றிக் கூறவும்.
அவர்களுக்குள் சிறந்தவர் "காளிதாசர்" என்பவர். இவர் ஒரு பிராமணர். பெரிய அறிவாளி. பல நூல்களை இயற்றினார். முக்கியமானவை சாந்தகுலம், ரகுவசம் என்னும் நூல்கள்.	காளிதாசரைப்பற்றியும், அவர் இயற்றிய நூல்களைப் பற்றியும் சொல்லவும்.

விஷயம்	முறை
5. பாஹியான் :—இவர் ஒரு சீனர். பௌத்த சந்நியாசி. விக்கிரமாதித்தர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். பல வருஷம் தங்கினார். கண்டவைகளை யெல்லாம் ஒரு புத்தகத்தில் எழுதிவைத்தார். அதாவது :— "செங்கோல் ஆட்சி உண்டு. செல்வம் செழித்தோங்கியிருக்கிறது. ஜனங்கள் சன்மார்க்கர்களாயிருக்கிறார்கள். சமாதானம் உண்டு. திருடர் பயம் இல்லை."	ஆசியாப் படத்தில் சீன தேசத்தைக் காட்டவும். பாஹியானைப்பற்றியும் அவர் எழுதியவைகளைப் பற்றியும் கூறவும். விக்கிரமாதித்தர் செய்த காரியங்களை ஞாபகப்படுத்திப் பாஹியான் எழுதினவைகளோடு சம்பந்தப்படுத்தலாம்.

பரீக்ஷைக் கேள்விகள்

பின்வருபவைகளுக்கு விடை தருக :—

1. விக்கிரமாதித்தருடைய ஜென்ம இராஜ்ஜியம், அவருடைய வமிசம், தகப்பன் பெயர், விக்கிரமாதித்தருடைய மற்றொரு பெயர்.
2. விக்கிரமாதித்தருடைய குணங்கள் யாவை?
3. அவர் செய்த நன்மைகளைக் கூறு.
4. நவரத்தினங்கள் என்று யாருக்குப் பெயருண்டாயிற்று. காளிதாசரைப்பற்றியும் அவர் இயற்றிய 2 நூல்களையும் கூறு.
5. பாஹியானைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
6. இந்தியாவின் படம் வரைந்து, அதில் விக்கிர மாதித்தருடைய இராஜ்ஜியத்தின் விஸ்தீரணத்தையும், தலை நகரையும் குறித்துக் காண்பி.

க. ப. சு.

1. விக்கிரமாதித்தர் :—குப்தகுல அரசர்களுள் ஒருவர் சமுத்திர குப்தர். இவரது மகன் பெயர் இரண்டாவது சந்திர குப்தர். வேறு பெயர் விக்கிரமாதித்தர்.

2. குணங்கள் :—பெரிய போர் வீரர், தைரியசாலி, நீதி நியாயமுள்ளவர், பரோபகாரி, கற்றவர், மத துவேஷமில்லாத வர், சங்கீதம், சிற்பம், சித்திரம் இவைகள்மட்டில் பிரியமுள்ள வர்.

3. செய்த காரியங்கள் :—தேசம் தக்ஷணம் வரையில் பரவியது. தலை நகரம் "உஜ்ஜயினி" குறைந்த வரி, கோவில் கள், சத்திரஞ்சாவடிகள், தருமசாலைகள், வைத்தியசாலைகள் கட்டப்பட்டன. கல்வி விருத்தியானது, குற்றவாளிகள் இலகு வாய்த் தண்டிக்கப்பட்டனர்.

4. நவரத்தினங்கள் :—சமஸ்தானத்தின் 9 வித்வான் களுக்கும் நவரத்தினங்களெனப் பெயர். காளிதாசர் என்பவர் ஒருவர். பெரிய அறிவாளி. அவர் இயற்றிய நூல்கள் :— சாந்த குலம், ரகுவம்சம்.

5. பாஹியான் :—சீனர்—பௌத்த சந்நியாசி. குப்த இராஜ்ஜியத்தில் கண்ட அறிய விஷயங்களை ஒரு புத்தகத்தில் எழுதிவைத்தார்.

விளம்பரம்

கடலூர் N. T.-யிலுள்ள R. C. எலிமெண்டரி ஹையர் கிரேடு போதனாமுறை பெண்பாடசாலையில், இவ் வருடம் புதிதாக ஆசிரிய மாணவர்கள் சேர்க்கப்படுவர். அதில் சேர விரும்புவோர், இப்பாடசாலையில் அச்சிட்டிருக் கும் விண்ணப்பப் பாரங்களைப் பூர்த்திசெய்து 1940-ம் ஹு மே மாதம் 31-ம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டும். விண்ணப்பப் பாரம், தேகத்திறமை யோக்கியதாபத்திரம் முதலியன வேண்டுவோர் தங்கள் முழு விலாசம் எழுதிய உறையுடன் மூன்று அணா ஸ்டாம் பும் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

Mother Leocadie Mary,
Mother Superior,
R. C. Elementary Higher Grade Training School,
Pudupalayam, CUDDALORE N. T.

நான் கொடுத்த "டோஸ்!"

சிறு கதை

A. Nargunam.

ஸ்ரீ சிதம்பரம் செட்டியவர்களை நீங்கள் சிலசமயம் அறிந்திருக்கலாம். ஸாக்ஷாத் அவரேதான் "சிதம்பரம் செட்டி மளிகைக் கடை" யின் முதலாளி. அந்த ஊரில் அவர் ஒருவருடன்தான் எனக்கு அதிகநட்பு. நான் அவ்வூருக்குப் புது 'வாத்தியார்.' நான் தனிப்பட்ட ஆசாமி. குடும்பத்தொல்லைகள் ஒன்றும் இல்லை. எம்பெருமான் சிதம்பரம் செட்டியவர்கள் இருக்கிறாரே, அவர் போக்கே சற்று அலாதிதான். எப்பொழுதும் ஒரே சட்டை, ஒரே அங்கவஸ்திரம், ஒரே வேட்டிதான் அணிந்திருப்பர். அவருடைய தொப்பைகூட சற்றேனும் குறைவதில்லை! எப்பொழுதும் ஒரே அளவாய்தான் இருக்கும்!!

என் சில்லறை செலவுகள்தான் இருக்கவே யிருக்கின்றனவே! சிதம்பரம் செட்டியார் கடையில் எப்படியோ இரண்டு ரூபாய்மட்டும் கடனாகிவிட்டது. இரண்டு மாதங்களாகியும் அக்கடனை அடைக்காமல் அசௌகரியத்தால் விட்டுவிட்டேன். செட்டியாரோ நடையாய் நடக்கிறார்! நான் எங்கே 'டிமிக்கி' கொடுத்துவிடப் போகிறேனோ வென்றபயம் அவருக்கு! என்னிடம் வருவதென்றால், திருடனைப் பிடிக்கவருபவர்போல் பதுங்கி வருவார். வந்து வெகு நேரம் பீடிகைப் போடுவார். கடைசியில் "அந்த பாக்கியைக் கொஞ்சம் கூடிய சீக்கிரம் பைசல் பண்ணிட்டா தாவிளை, சார்!" என்று தனது நோக்கத்தைத் தெரிவித்துவிட்டுப் போய்விடுவார். நானும் என்னால் ஆனமட்டும் பொறுத்துப் பார்த்தேன். முடியவில்லை. 'சரி; இனிமேல் வந்தால், அவருக்கு ஒரு சரியான "டோஸ்" கொடுத்து அனுப்பாமல் விடுவதில்லை," என்ற தீர்மானத்தை எனக்குள் நிறைவேற்றிக் கொண்டேன்.

அதற்கேற்றாற்போல ஒருசமயம் என்னிடம் அவர் வந்ததும் எடுத்த எடுப்பில்,

"என்ன சார்! நம்ப பையனைக் கொஞ்சங்கூட கவனிக்கிறதில்லை போலிருக்கே! பையன் வரவர ரொம்ப கொட்டம்

பண்ணுரான், சார்! பையனை சக்கையாய் உதைத்து திருத் துங்க, சார்!", என்று பீடிகை ஆரம்பித்தார்.

"ஆமாமாம், சும்மா நிறுத்துங்க, செட்டியார்! உங்க பையன் ஒருத்தமட்டுந்தான் பள்ளிக்கூடத்தில் அதிசயமோ? பையன்களை அடிக்கதான் ஐந்தாறு வாத்திமார்கள் வேலையை விட்டுவிட்டு உட்காந்திருக்காளோ? ஒண்ணுந்தெரியாம, எஞ் செட்டியார் ரொம்ப ஓட்டிரிங்க?" என்றேன் நான் வெடு வெடுப்புடன்.

"இல்லே; சார்! நேத்து பாருங்க, அந்தப் பயலுக்கு ஒரு சின்ன பூச்சாண்டி காட்டி திருத்திடலாம்ணு பாத்தேன்; பையன் அப்பனுக்கு அப்பனாய் இருக்கான்! பையன் கடைசிலே எனக்கே யல்லவா பூச்சாண்டி காட்டி மிரட்டப்பாக்கிறுன்? அப்பேர்ப்பட்ட பயலே யாரிடம் சொல்லி எப்படி திருத்த முடியும்? நீங்கதான் கொஞ்சம் சொல்லுங்க, சார்!"

"பையன் கொட்டம் பண்ணிஞ அவனுக்குப் பூச்சாண்டி காட்டிதான் திருத்தச் சொல்லுதோ? உங்கள் மூளையே மூளை! செட்டியாரே! இது இருபதாம் நூற்றுண்டுண்ணு தெரியா தோ? பிள்ளைகளைச் சமாளிப்பதுண்ணு அவ்வளவு லேசான காரியமா? பிள்ளைகளெல்லாம் கடவுளால் மட்டும் கண்டறியக் கூடிய அவ்வளவு அபூர்வ சிருஷ்டிகள் அல்லவா? நீங்களென்ன மோ பையனைத் திருத்துவ தென்றுல் ஒரு பூச்சாண்டி வேலேண்ணு நினைத்துட்டீர். எல்லா தகப்பன்களும் உண்மை யில் தகப்பனுவார்களா? செட்டியாரே? பையனின் இயற்கை குணமென்ன? எந்த வழியில் திருத்திஞ பையன் திருந்து வான்? இந்தமாதிரி விஷயங்களை யெல்லாம் கொஞ்சமாகிலும் யோசித்துப் பார்த்ததுண்டா? உங்களுக்கென்ன? உங்கள் பணப்பை நிறையவேண்டியது; தொப்பையும் சரியவேண் டியது! பையன் எக்கேடு கெட்டால் உமக்கென்ன? "நம் பிள்ளைதானே, நாளைய தேசப்பிரஜை! அவனுடைய நடத்தை, படிப்பு, பழக்க வழக்கம் முதலியவற்றைக் கவனிப்பதுதானே நமது முதல் கடமை! நம் பிள்ளை மட்டில் நாம் பொறுப்புக் காட்டாவிட்டால், வேறுயார், எப்படி காட்டமுடியும்? பள்ளிக் கூடம் தான் எப்படி உருப்பட்டு சரிவர நடக்கும்?" என்றெல் லாம் கொஞ்சமாகிலும் நினைத்துப் பார்த்தீரா? பையன் ஏதாகி லும் கொட்டம் செய்தால், உடனே வாத்தியார்மேல் போட்டு விடுகிறீர் பழியை! கேவலம்! இந்த இரண்டு ரூபா காசுக்காக என்மேல் எத்தனைத்தடவை படையெடுத்திருப்பீர்? ஒரே ஒரு

தடவையாவது, இன்று தவிர பையனின் படிப்பைப்பற்றி என்னிடம் கலந்து பேசியிருப்பீரா? எங்கே, விரல் விடுங்கள் பார்ப்போம்! உம்மைப்போன்ற ஆசாமிகள் நம்தேசத்தில் மலிந்துவிட்டதால்தான் நம் தேசம் கல்வியில் முன்னேறுமல் இருக்கு! என்ன? நான் சொல்வது விளங்குதா, செட்டியாரே? நான் சொல்வது வாஸ்தவம்தானே?" என்று நான்பாட்டு, எனக்குவந்த ஆத்திரத்தில், "பிள்ளைகள் கல்வியில் பெற்றோர்கள் பொறுப்பு", என்ற தலைப்பில் நான் என்னென்ன வாசித்திருந்தேனே, எல்லாவற்றையும் சரமாரியாய் வெளுத்து வாங்கினேன்.

என்ன பேசுவதென்று தெரியாமல் செட்டியார் "பே! பே!" யென்று விழித்தார். எனக்கு எரிச்சல் இன்னும் அடங்கின பாடில்லை. மறுபடி ஆரம்பித்தேன் என் "லெக்ச்சரை". செட்டியார், "கம்மென்று" நட்டுவைத்த சிலைபோல நின்று கொண்டிருந்தார்!

"ஆமாம் செட்டியாரே! எனக்கொரு நல்ல யோசனைத் தோண்ரது! நீங்கபாட்டு மெட்ராஸுக்கு "த்ரூ" டிக்கெட் எடுங்கள். அடையாறில் போய் இறங்குங்கள். இறங்கி, "டாக்டர் மாண்டிஸோரி, என்று ஒருத்தராமே, அவர் எங்கே," யென்று விசாரித்தால் சொல்லுவார்கள். அவரிடம் நேரேபோனீராஞல், பிள்ளைகளை எப்படி சமாளிப்பது என்பது பற்றி ரொம்ப ஜோராய், திவ்யமாய் சொல்லிக் கொடுப்பார். அந்த அம்மாவிடம் போய், பூச்சாண்டி கீச்சாண்டி, என்று வாயை யேது திறந்துவிடப் போகிறீர். கோபத்தில் 'பட்' டென்று இரண்டு தொப்பையில் வைத்தாலும் வைத்துவிடுவார்! ஜாக்ரதை! தெரியிதா, செட்டியார்? என்று கேட்டுவிட்டு என் கோபம் ஒருவாறு தணிய, என் லெக்ச்சருக்கு நான் சட்டென்று "ப்ரேக்" போட்டேன்.

"ஊம்! பேசியாய்விட்டதா, சார்? இண்ணிக்கு என்னமோ, ஒண்ணுந் தெரியல! அட ஆண்டவனே! நான் யார் முகத்தில் முழிச்சேனே? தெரியல. இந்தப் பக்கம் இரண்டு நாள் வரவாணும்னு சொன்ன வராமல் இருந்துடரேன். அதுக்கு இந்த மாதிரி திட்டு திட்டுண்ணு திட்டுணுமா? மெட்ராஸாம்! "டிசிரிமாண்டு", டாக்டராம்! "உம்! நான்ன இப்ப ஒங்களுக்கு அவ்வளவு கேவலமாய் போய்டுத்து? சரிதான் போங்க, சார்!" என்று செட்டியார் முணு முணுத்துக் கொண்டே கம்பியை நீட்டி விட்டார்.

அன்றைய தினத்திலிருந்து செட்டியார் இந்தப் பக்கம் தலையைக் காட்டுவதேயில்லை. நான் கொடுத்த "டோஸ்" கொஞ்சமாகிலும் உறைத்திருக்குமென்று நினைக்கிறேன். உங்களுடைய அபிப்ராயமெப்படி ?

விவசாயம் சம்பந்தமான பழமொழிகள்

P. M. Mariamichaelsamy.

1. ஏரினும் நன்று எருவிடுதல் நட்டபின்
நீரினும் நின்றதன் காப்பு.
2. உரம் ஏற்றி உழவு செய்.
3. எருக்குழியின்றி ஏர் பிடியாதே.
4. பாயும் ஜலத்தை ஊற்றிக் கொட்டு, பழைய
எருவை எடுத்துக்கொட்டு.
5. அறிவிலே விளையுமா? எருவிலே விளையுமா?
6. தெய்வத்திற்குச் செய்வதும் சேய்க்குரம் போடுவதும் பழுதாகாது.
7. எரு செய்வது இனத்தான் செய்யான்.
8. எரு மணமில்லா பயிர் நறுமணமில்லாமலரோடொக்கும்!
9. குப்பையில்லா வேளாண்மை சப்பை.
10. குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
11. ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.
12. கொளிஞ்சி இட்ட நிலம் குலைகாணும்.
13. ஆவாரை நெல் காட்டும்; ஆடு பயிர் காட்டும்.
14. ஆட்டு எரு அவ்வருஷம்; மாட்டு எரு மறுவருஷம்.
15. ஆடு மிதியாக் கொல்லையும், ஆளில்லாப்
பெண்ணும் வீண்.

ரப்பர் (Rubber)

U. A. Dass.

I. ரப்பர் கண்டுபிடிக்கப்பட்ட விதம்

சற்றேறக்குறைய 450 ஆண்டுகளுக்குமுன் கொலம்பஸ் தென் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அவர் அங்கு கண்ட அதிசயங்களுள் ஒன்று, தரையில் அடித்தால் வெகு உயரம் எழும்பக்கூடிய ஓர் வகையான கறுப்புப் பந்தால் தென் அமெரிக்கர் விளையாடினதேயாம்.

அப்பந்து ஓர் வகை மரத்தின் பிசினினல் செய்யப்பட்டது. அப்பிசினை அமெரிக்கர் கூகூக் (Caouchouc) என்று கூறிவந்தார்கள். அமேஜான் நதிப் பள்ளத்தாக்குகளில் ஓர் வித பிசின் தரும் மரங்கள் ஏராளம். அம்மரத்தின் வெண்ணிற மான பாலையே அவர்கள் கூகூக் என்று கூறிவந்தனர். அவர்கள் அவ்வுலர்ந்த பாலினல் தண்ணீர்ப் பாத்திரங்களும், பாதங்களும், தேகமும் நனையாமல் இருப்பதற்காக முறையே பாதரக்ஷைகளும், மழை அங்கிகளும் செய்துகொண்டிருந்தார்கள்.

வெகு காலம்வரை ஸ்பானியர் இந்த கூகூக்கைப்பற்றி சிறிதும் சிந்தியாது இருந்தனர்போலும். ஆதலால்தான் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டபின்பு அநேகமாய் 3 நூற்றுண்டுவரைகூட இந்த கூகூக்கைப்பற்றி ஐரோப்பாவில் யாதொரு பிரஸ்தாபமும் உண்டாகவில்லை.

கடைசியாய் யாரோ ஒருவர் தற்செயலாய் அக்கூகூக்கால் பென்சில் எழுத்தை அழிக்கக்கூடும் என்று கண்டுபிடித்தவுடன்தான் அதற்கு வெகு கிராக்கி ஏற்பட்டது. தென் அமெரிக்கர் கொடுத்திருந்த கூகூக் என்னும் பெயர் ஸ்பானியர் உச்சரிக்க சிரமமாய் இருந்ததால் அவர்கள் அதற்குப் பதில் அதன் வேலையை நோக்கி காரணப்பெயராக ரப்பர் (Rubber) என்று பெயரிட்டனர்.

II. ரப்பர் கிடைக்கும் மரம்

அநேகமாய் ஆயிரம் விதமான மரங்களிலிருந்து ரப்பர் பால் எடுக்கலாம். ஆனல் அவைகளில் 50 வித மரங்களில்

கிடைக்கும் ரப்பர்பால் மட்டும்தான் வியாபாரத்திற்கு லாயக்குள்ளது. உலகத்தில் உபயோகிக்கப்படும் ரப்பர் எல்லாம் 'ஹெவியா பிராஸிலியென்ஸிஸ்' (Hevea brasiliensis) என்னும் ஒரு வித ரப்பர் மரத்தினின்றே எடுக்கப்படுகின்றது. இந்த மரத்தினின்று எடுக்கப்படுகின்ற பாலில் 90 சதவிகிதம் ரப்பர் பால் உற்பத்தியாகின்றது.

III. மரத்தின் பொது விவரம்

ஹெவியா பிராஸிலியென்ஸிஸ் என்ற செடி மரம் 100 அடி உயர்ந்து வளரக்கூடிய பெரும் மரம். அதனுடைய அடி மரமும் 12 அடி சுற்றளவுவரைப் பெருத்து வளரக்கூடும். ஆனால் சாதாரணமாய் அம்மரம் 60 அல்லது 80 அடி உயரம்தான் வளருவதுண்டு. இம்மரம் சவுக்கைப்போல் உயர்ந்தும், இலவைப்போல் படர்ந்தும் வளரும்.

இதன் இலைகள் அவரை இலையைப்போன்று மூன்று ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்றன. ஒவ்வொரு இலையும் நீண்டு குறுகி நுனி சிறுத்து இருக்கின்றது.

இதன் புஷ்பங்கள் வெகு வெகு சிறியவை சாதாரணமாய்ப் பசுமை நிறமுள்ளவை. ஆண் பூக்களும், பெண் பூக்களும் தனித்தனியே இருக்கின்றன.

ஓர் காயில் 3 விதைகள் உண்டு. காய் முற்றினதும் ஆமணக்கைப்போல் வெடித்து விதைகள் நாற்புறங்களிலும் சிதறிப்போம்.

நம்முடைய தோலை உரித்தால் நாம் காண்பது நரம்புத்தாரைகள். அவ்விதமே ரப்பர் மரத்தின் பட்டைகளை நீக்கினால் உள்ளே ரப்பர் பால் உள்ள குழாய்களைக் காணலாம். இக்குழாய்களை எல்லாம் பட்டைகள் அடைப்பானைப்போல் அடைத்துக்கொள்கின்றன.

IV. ரப்பர் தோட்டங்களின் உற்பத்தி

முன் ஓர் காலத்தில் உலகிற்குத் தேவையான முதல் தரமான ரப்பர் எல்லாம் அமேஜான் நதி பள்ளத்தாக்குகளிலிருந்தே கிடைத்துவந்தது. ஆனால் மோட்டார் வண்டிகள் கண்டுபிடிக்கப்படவும் ரப்பர் அதிகமதிகமாய் வேண்டியிருந்தது. ஆதலால் பற்பல இடங்களிலும் ரப்பர் தோட்டங்கள் உற்பத்தி செய்யத் துவக்கினர்.

100 அங். மழை வருஷம் முழுதும் பெய்யக்கூடிய இடங்களில், 70 முதல் 90 டிகிரி F. வரையில் உஷ்ணம் இருக்குமாயின் ரப்பர் மரங்கள் ஏராளமாய் பயிராகும். இவ்வித சீதோஷ்ணம் கிழக்கிலும், ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் விஸ்தாரமான இடங்களில் உண்டு.

1873-ம் ஆண்டிற்குப்பிறகு இலங்கையில் ரப்பர் மரங்கள் (Hevea trees) பயிரிடப்பட்டன. அத்தோட்டங்கள் நல்ல பலனைக் கொடுத்ததால் பிறகு மற்ற இடங்களிலும் ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தினார்கள்.

மலேயா, டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகள், இந்தியா, சரவாக், போர்னீயோ, பிரெஞ்சு இந்து சைனா, சையாம், ஆப்பிரிக்காவின் பல்வேறு பாகங்கள் ஆகிய இடங்களில் ரப்பர் தோட்டங்களை உற்பத்திசெய்தனர்.

தற்சமயம் 94 சத விகிதமான ரப்பர் பயிர்செய்யப்பட்ட ரப்பர் தோட்டங்களினின்றே எடுக்கப்படுகின்றது. ஏனெனில் இந்த ரப்பரும், அமேஜான் நதிப் பள்ளத்தாக்குகளில் கிடைக்கக்கூடிய காட்டு ரப்பரைப்போல் அவ்வளவு முதல்தரமானதாய் இருப்பதோடு, சுத்தமாகவும், நேர்த்தியான நிலைமையிலும் இருக்கின்றது. ஆதலால் ஜனங்கள் பயிர்செய்யப்பட்ட ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியாகும் ரப்பரையே விரும்புகின்றனர்.

V. ரப்பர் மரம் பயிர்செய்தல்

'ஹெவியா' ரப்பர் மரம் அநேக விதமான நிலங்களில் பயிராகும். ஆனால் சதுப்பு நிலங்களில் பயிராகாது. சிற்சில சமயங்களில் 2,000 அடி உயரத்திலும் இம்மரம் பயிராகும் எனினும் தாழ்ந்த இடங்களில்தான் நன்றாய் செழித்து வளரும்.

இவ்விதம் ரப்பர் மரம் பயிராகும் தோட்டங்களை, வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகிறார்கள். வியாதியைப் பரப்பக்கூடிய அழுகிய குச்சிகளையும் மரத்துண்டுகளையும், இதர வஸ்துக்களையும் எடுத்து அடிக்கடி தோட்டங்களைச் சுத்தி செய்வார்கள். முதலில் தோட்டக்காரர்கள் தோட்டங்களில் இருந்த புல்லை முதற்கொண்டு அப்புறப்படுத்தி வந்தனர். ஆனால் மழை காலங்களில் மேல் மண்ணை மழை நீர் அப்புறப்படுத்தினதால் இப்பொழுது மேல் மண் கெட்டிப்பட்டு அப்புறப்படுத்தப்படாத முறைகளைக் கையாள்கின்றனர்.

விடுகதைகள்

1. ஈரேழு பதினாறு சிறகு இருபுறமும் முத்து மயில் ஆட, வராத கிளிகள் எல்லாம் வந்து விளையாட அது என்ன? கிளிகள் எவை?

2. நான்கு உலக்கை குத்திவர, இரண்டு முறம் புடைத்துவர, துடுப்புகொண்டு துலாவிவர, துரைமார்கள் ஏறிவர அது என்ன? துரைமார்கள் யார்?

3. நட்டான் நடுகாட்டில் ஒட்டன் கிணறு தோண்டு கிறான். அவன் யார்?

4. குறத்தி மகள் குள்ளி என்ன வைத்தாலும் சுமப் பாள். அவள் யாவள்?

5. சென்னைப்பட்டணம் செட்டியார் வீட்டில் கொல்லை அவர் மகள் பேருதில்லை. அவள் யாரோடும் பேசுவதில்லை. அவள் வயிற்றில் ஆறு மாதம் பிள்ளை. இது என்ன?

6. யானைமலைக்கு அப்பாலே கொக்கு கெண்டை முழுங்குது பார்த்தாயா? இது என்ன அதிசயம்! காக்கை ஆட்டை விழுங்குது பார்த்தாயா? இது என்ன?

7. வரிவரி வண்ணக் கொக்கு வாமடை வெள்ளைக் கொக்கு. இது என்ன?

8. கோண மாண திரி, கொங்க நாட்டுத் திரி, உங்கள் ஊர்போய் எங்கள் ஊர் வருகிறது. இது என்ன?

9. சின்னச் சின்னப் பாத்திரம் சிங்காரப் பாத்திரம் சிங்களவர் வந்தாலும் சிதைக்காத பாத்திரம். பாத்திரம் எது?

10. சதுர கிரி மலை மேலே விதை யூன்றி, சாாசரத்தில் கொடி படர்ந்து, மேலே பழுத்து கீழே விழுந்து எடுப்பா ருண்டு தின்பாரில்லை. இது என்ன?

S. A. Fernando.

விடுகதை விடைகள்

(கொத்து 30, மலர் 7, பக்கம் 168)

1. முடக்கத்தான். 2. சீயக்காய். 3. சித்தரத்தை. 4. லாந்தர் மரம். 5. பாம்பு. 6. எழுத்து. 7. விராட்டி. 8. வானம், சந்திரன், நட்சத்திரங்கள். 9. (உடலமைப்பு) பேன்கள். 10. பனை.

M. Devaraj.

அபிநயப் பாட்டு

கும்மி மெட்டு. (IV Std.)

எல்லாம் தெய்வச் செயல்.

1. வேட்டுவன் கையிலோர் வில்லுடனே பெருங்
காட்டினில் வேகமாய் நடந்தனனே
வேட்டைகள் ஆடிட ஆவலுடன் வெகு
ஓட்டமாய் ஓடித்திரிந்தனனே.

2. சிந்தனையோ டொன்றுங் காணாததினாலே
ஏந்திய வில்லுடன் ஏங்கினனே
வந்தடைந்து நிழல் தந்து அங்குநின்ற
ஆல மரத்தடி தங்கினனே.

3. நித்திரை மெத்தவும் செய்தனனே பின்பு
சுற்றி எழுந்து வான் நோக்கினனே
ஜோடிப் புறாக்கள் கிளைதனிலே இன்பாய்
கூடி யிருந்ததைப் பார்த்தனனே.

4. புந்தியில் ஆனந்தம் தோன்றினதால் அவன்
சொந்த வில்லைத் தரை ஊன்றிடுங்கால்
அந்தப் புறாக்களை உண்ண ஓர் ராஜாளி
அந்தர மீதில் பறந்தது காண்.

5. மெல்ல மெல்ல குறி பார்த்தனனே
வில்லை வளைத்து மேல் எய்தனனே
பாணம் ராஜாளிமேல் பாய்ந்ததுவே அது
வானத்திலிருந்து கீழ் வீழ்ந்ததுவே.

6. புற்றில் ஓர் அரவம் சீறிடவே காலைப்
பற்றியே பற்களால் கீறிடவே
சற்றே விஷந் தலைக் கேறிடவே அவன்
கற்றறை சாய்ந்தான் கதறிடவே.

7. இருதலைக் கொள்ளி எறும்புபோல அங்கு
பரிதவித்திட்ட புறாக்களுமே
துரிதமாய்ப் பறந்து சென்றனவே பெரும்
பருவரல் நின்று தவறினவே.

8. பூதலம் ஒன்றெண்ண தேவன் ஒன்றெண்ணுவார்
ஆதலினால் சிறு மாணவர்காள்
எல்லாம் அவனது சித்தப்படி என்று
அத்தன் பதத்தைத் துதித்திடுவோம்.

குறிப்பு: புந்தி = புத்தி. பருவரல் = துன்பம்.
அத்தன் = கடவுள்.

Thomas J. Jesuadian.

182452

ELEMENTS OF ENGLISH GRAMMAR IN TAMIL

(இங்கிலீஷ் இலக்கண நூலாதாரம்)

13th edition, a very useful book for primary classes.

Crown 8vo, 76 pp. Wrapper.
As. 4.

FIRST ENGLISH GRAMMAR

By Rev. J. H. Quinn, S.J.
6th Edition. Treats of English words and of the construction of Sentences written mainly for the use of pupils in the I, II and III Forms.

Crown 8vo, 88 pp. Stiff Cover
As. 5.

Apply to:—

THE SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press,
TRICHINOPOLY.

நல்லொழுக்கம்

(By Bishop Roche)

இதில் சுகவழி, அன்னபானம், நித்திரை, நடையுடை பாவனை, உண்மையுடைமை, பேசும் வகை, குடும்பம், பள்ளிக்கூடம், சிநேகம், காகிதம் எழுதும் வகை, உத்தியோகம் இவைகளைச் சார்ந்த விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் எத்திறத்தாருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்கே பிரயோஜனமும் அவசியமுமானது. வெகு காலமாக Middle School-களிலும், Elementary School-களிலும் இவற்றைப் பாடப் புஸ்தகமாக உபயோகித்துவருகிறார்கள்.

(13-ம் பதிப்பு)

82 பக்கங்களடங்கியது அணா 3.

மற்ற செலவுகள் பிரத்தியேகம்.

திவ்விய சேசுவின் திருச்சரிதை

3-ம் பதிப்பு

96 பக்கங்களடங்கியது

கர்த்தர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உத்தானம், பரலோக ஆரோகணம், திருச்சபை ஸ்தாபகம், அவர் செய்தருளிய புதுமைகள், அளித்தருளிய ஆத்தும சரீர நன்மைகள், அவரது பிரசங்கம், உவமைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வோர் பாடத்தில் விவரித்திருப்பதால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகமாக இயற்றியிருக்கிறது. நமது பரிசுத்த ஆண்டவரின் ஜீவிய சரிதையை அறிய விரும்பும் பெரியோர், புதுக்கிறீஸ்தவர், இதர மதஸ்தர் இந்நூலை வாசித்து அபரிமிதமான பலனடைவார்கள். விலை அணா 3.

பங்கிராஸ்

அல்லது
பூர்வீக
சுரங்க
சபை
யின்
விநோத
விர்த்
தாந்தம்

வாசிக்க இனிமை!

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை
சந்தியாகப்பர் சுவாமியார்
இயற்றியது.

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் நமது முன்னோராகிய கிறீஸ்துவர்கள் சத்திய வேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில் பிரமாணிக்கம் தவறுதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும். இதர மதஸ்தரும் நமது சத்திய வேதத்தின் உண்மையையும் பரிசுத்த தனத்தையும் தேவகிருபையால் அறிந்து கத்தோலிக் சபையில் வந்து சேர்வார்கள்.

செலிட்டாசு பெரின்பாக்

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

...ளை !!!

...களுக்கு இன்றியமையாதது

"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

துரைத்தனத்தாரின் சீர்திருத்த முறைப்படி விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும். நவீன அபிநய விளையாட்டுகள்.

போதனாவிஷய பூங்கொத்து சந்தாதார்களுக்குமட்டும் இரு புத்தகங்களும் சேர்ந்து ரூ. **1-4-0**-க்குக் கொடுக்கப்படும். தபால் கூலி பிரத்தியேகம். V. P. P-யிலும் அனுப்பலாம்.

மற்றவர்களுக்கு இருபுத்தகங்களும் ரூ. **1-8-0**-க்குக் கொடுக்கப்படும்.

ஒரே தடவையில் 6 புத்தகங்களுக்குமேல் வாங்குகிறவர்களுக்கு தபால் கூலி இனாம். 12 புத்தகங்கள் வாங்குபவருக்கு 1 புத்தகம் இனாம்.

தனிப் பிரதி **0-12-0**.

விலாசம் :— **Mr. V. M. JOSEPH**, Author, Publisher,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

ஸங்கீதம் ! பள்ளி சங்கீதம் !!

எலிமெண்டரி பாடசாலை கட்டாயப் பாடங்களுள்

ஸங்கீதம் ஒன்று

எமது கத்தோலிக்கு

"கர்னாடக ஸங்கீத போதினி"

மூன்று பாகங்கள் ஒவ்வொன்றும் தனி விலை அணா 6

இவை மூன்றும் ஒருவருக்கு அன்னியர் உதவியின்றி :—

ஸங்கீதம் பயில்விக்கும் ஆசிரியன் !
ஆர்மோனியம் பிடில் கற்பிக்கும் பாகவதன் !
பள்ளிச்சிறுவர்கள் சிறுமிகளின் தோழன் !

துரைத்தனத்தார் அங்கீகரித்தவை !

The Catholic
"Karnatic Music Instructor"
For beginners and for use in schools
approved by the text-book committee
Vide Fort St. George Gazette Part 1-B, Page 578, dated 17-11-1939.

விலாசம் :— A. GNANADICKAM,
The South Indian Music School,
Road-side House, St. Thomas Church Road, Ootacamund.

FOR

MANAGERS OF SCHOOLS IN NEED OF TRAINED TEACHERS	TRAINED TEACHERS IN NEED OF EMPLOYMENT

The following Managers are in need of trained teachers in their Schools. Applications may be sent direct to their addresses.

கீழ்கண்ட மானேஜர்களுக்குப் போதனாமுறை பயின்ற உபாத்திமார்கள் தேவை. வேலையில்லாத உபாத்திமார் அன்னவர்களுக்கு நேராகவே மனுக்கள் சமர்ப்பித்துக்கொள்ளக்கடவர்.

Secondary and Higher Elementary Trained Teachers

1. The Manager, R. C. Schools, Andavoorani, Vattanam, (Ramnad Dt.).
2. The Manager, St. Louis R. C. School, Vaippar P. O., (Tinnevelly Dt.).

Secondary Trained Teachers

1. The Manager, R. C. Schools, Malayadipatti, Manaparai P. O.
2. The Manager, R. C. Schools, Panneipatti, Chintamanipatti P. O.
3. The Manager, Nammalwar H. E. School, Namakal.

Higher Elementary Trained Teachers

1. The Manager, Aided School, Morkuli, Alagapuri P. O., Sivaganga Taluk.
2. The Manager, St. Peter's R. C. School, Vembar, (Tinnevelly Dt.)

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.